தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு    வகுப்பு 07    2013

**பன்முகத்தேர்வு வினாக்கள்**    பகுதி 1    **வருடம்: 07**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இயல், இசை, நாடகம் என்பது<br>முத்தமிழ் 2. செந்தமிழ் 3. பைந்தமிழ் 4. நல்தமிழ் | 1 | 2 | 3 | 4 |
| 2 | விளையும் ---------- முளையிலே தெரியும் (பழமொழி)<br>1. கயிரை 2. பயிரை. 3. பயிர். 4. குருவியை. | 1 | 2 | 3 | 4 |
| 3 | Hospitality என்றால்<br>1. வரவு 2. விருந்தோம்பல் 3. விருந்து 4. வணக்கம் | 1 | 2 | 3 | 4 |
| 4 | சினங்காத்தல் என்பது<br>1. சிங்கம் காத்தல் 2. ஆறுவது சினம் 3. சின்னம் காத்தல்<br>4. ஆற்று சின்னம் | 1 | 2 | 3 | 4 |
| 5 | இலங்கையில் தென் பகுதியில் வசிப்பவர்கள்<br>1. நாகர் 2. ஆரியர் 3. தமிழர் 4. சிங்களவர் | 1 | 2 | 3 | 4 |
| 6 | உறவின் எதிர்ச்சொல் என்ன?<br>1. விருப்பு 2. பிரிவு 3. ஆசை 4. தனிமை | 1 | 2 | 3 | 4 |
| 7 | கரை-கறையின் பொருள்?<br>1. கல்வி , நிறம் 2. ஓரம் - அழுக்கு<br>3. சேர்தல் - நீங்குதல் 4. கறுப்பு -அழுக்கு | 1 | 2 | 3 | 4 |
| 8 | நான் தமிழ்ப் பாட்டு பாடுகிறேன். இதில் வினைச்சொல்<br>1.நான் 2.பாடுகிறேன். 3.தமிழ் 4. பாட்டு | 1 | 2 | 3 | 4 |
| 9. | உழவர் திருநாள் என்பது.<br>1.தீபாவளி 2.தைப்பொங்கல் 3. நவராத்திரி 4.நத்தார் | 1 | 2 | 3 | 4 |
| 10. | பொருத்தமான சொற்கள்.<br>1. மகன்-அரசன் 2. பரி-குதிரை 3. சரி-யானை<br>4. தந்தை - வீடு | 1 | 2 | 3 | 4 |
| 11. | திருவள்ளுவர் எழுதிய நூல்<br>1. சிலப்பதிகாரம் 2. திருக்குறள்<br>3. நாலடியார் 4. மூதுரை | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | இளமையில் ---------- சிலையில் எழுத்து.<br>1. அழகு 2. கல்வி 3. எழுத்து 4. இளமை | 1 | 2 | 3 | 4 |
| 13. | தா என்ற சொல்லின் வினைமுற்று<br>1. தந்தான் 2. தந்த 3. தருகிற 4. தருகின்ற | 1 | 2 | 3 | 4 |
| 14. | சரியான வசனம் எது?<br>1. யானை கத்தியது 2. யானை பிளிறியது<br>2. 3. யானை உறுமியது 4. யானை சீறியது | 1 | 2 | 3 | 4 |
| 15 | சேவல் கூவும். மயில்<br>1. கத்தும் 2. சீறும் 3. அகவும் 4. பேசும் | 1 | 2 | 3 | 4 |
| 16 | அடுக்கு தொடரின் எடுத்துக்காட்டு.<br>1. மல மல 2. சட சட 3. மெல்லமெல்ல 4. கல கல | 1 | 2 | 3 | 4 |
| 17. | பெருங்காற்றால் மரக்கிளைகள் முறிந்து<br>1. விழுந்தன 2. விழுந்தது 3. ஓடியது. 4. சென்றன. | 1 | 2 | 3 | 4 |
| 18. | மின்பொறி என்பது<br>1. நோய் 2. மின்இயந்திரம்<br>3. மின்னல் 4. புல் | 1 | 2 | 3 | 4 |
| 19. | அகரவரிசையில் எழுதுக உழவன்,இடையன்,ஊர்,எட்டு<br>1. இடையன்,உழவன்,எட்டு,ஊர் 2. இடையன், ஊர், எட்டு, உழவன்<br>3. இடையன்,உழவன்,ஊர்,எட்டு 4. உழவன், ஊர் இடையன், எட்டு | 1 | 2 | 3 | 4 |
| 20. | பேரூந்து என்பது.<br>1. புகைவண்டி 2. கார்<br>3. பஸ் வண்டி 4. துவிச்சக்கர வண்டி | 1 | 2 | 3 | 4 |
| 21 | சிலப்பதிகாரம் பிரித்து எழுதினால்<br>1. சில் ‌ஃ பதிகாரம் 2. சில ‌ஃ பதிகாரம் 3. சிலம்பு ‌ஃ அதிகாரம்<br>4. சில ‌ஃ அதிகாரம் | 1 | 2 | 3 | 4 |
| 22 | அவள் கால் சலங்கை கலீர் கலீர் என ஒலித்தது. கலீர் கலீர் என்பது<br>1. மரபுச்சொல் 2. அடுக்குமொழி<br>3. வினைசொல் 4. தொடர்மொழி | 1 | 2 | 3 | 4 |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | எங்கள் வீட்டில் பல உறவினர் வந்து 1.தங்கினார்கள். 2.தங்கினாள். 3.தங்கின 4.தங்கினான். | 1 | 2 | 3 | 4 |
| 24 | வெண்கட்டியை பிரித்து எழுதினால்<br>1. வெண்-கட்டி 2. வெண்ணை-கட்டி<br>3. வெண்மை-கட்டி 4. வெள்ளை-கட்டி | 1 | 2 | 3 | 4 |
| 25 | சரியான வசனம் எது?<br>1. படைவீரர்கள் மடிந்தனர் 2 . படைவீரர்கள் மடிந்தது<br>3. படைவீரர்கள் மடிந்தது 4. படைவீரர்கள் மடிந்தன | 1 | 2 | 3 | 4 |
| 26 | Signature என்பது<br>1. எழுத்து 2. வசனம் 3. கூறுதல் 4. கையொப்பம் | 1 | 2 | 3 | 4 |
| 27 | விருந்தினரை வரவேற்பது<br>1. வீரம் 2. மானம் 3. இன்பம் 4. விருந்தோம்பல் | 1 | 2 | 3 | 4 |
| 28 | பொன்னன் என்பது--------------<br>1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. இடப்பெயர்<br>4. காலப்பெயர் | 1 | 2 | 3 | 4 |
| 29 | கேள்வி வாக்கியம் என்பதற்கு உதாரணம்.<br>1. என் பெயர் ராம் 2. உன் பெயர் என்ன?<br>3. நான் விளையாடுவேன் 4. எனக்கு ஒரு தங்கை | 1 | 2 | 3 | 4 |
| 30 | அவள் இதயம் ---------- என அடித்துக் கொண்டது.<br>1.சலசல, 2. படபட 3.கடகட, 4. கலகல | 1 | 2 | 3 | 4 |

**(30 புள்ளிகள்)**

தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு வகுப்பு 07 2013

**வினாக்கள்:** **பகுதி 2**
**வருடம்: 07**

**1. பின்வரும் பந்தியை வாசித்து, கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

உலகில் சான்றோர்களால் ஒரு மொழி செம்மொழியாக போற்றப்படுவதற்கு அம்மொழியில் அமைந்துள்ள இலக்கிய இலக்கணச் செழுமையே காரணமாகும். மிக சிறந்த இலக்கியங்கள் தமிழில் உள்ளன. அவற்றுள் ஐம்பெருங்காப்பியங்பள் பெருஞ் சிறப்புடையன. அத்தகைய அரும்பெரும் காப்பியங்களில் மிகச் சிறந்ததாக சிலப்பதிகாரம் போற்றப்படுகிறது. இது முத்தமிழ்க்காப்பியம், நாட்டுக்காப்பியம், இறைநெறிக் காப்பியம், குடிமக்கள் காப்பியம் நாட்டுக் காப்பியம், நாடகக் காப்பியம் என பலவகையான சிறப்புக்கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் எனும் முத்தழிழும் இருப்பதால் முத்தமிழ்க்காப்பியம் என பெயர் பெறுகிறது. இதனை எழுதிய இளங்கோவடிகள் இக்காப்பியத்தை சேர சோழ பாண்டிய நாட்டின் இயற்கை வளங்களும் கலை கலாச்சாரப் பின்னணிகளும், வாழ்க்கை முறைகளும் மன்னர்களின் ஆளுமைத்திறமும் கூறுவதால் தமிழ்நாட்டுக் காவியம், குடிமக்கள் காவியம் என்னும் பெயரையும் பெறுகிறது.

ஒரு மொழி செம்மொழியாக போற்றப்படுவதற்கு எது காரணம்?

________________________________________

எந்த நூலைப் பற்றி இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது?

________________________________________

அதனை எழுதியவர் யார்?

________________________________________

எதனால் முத்தமிழ் காப்பியம் எனப் பெயர் பெறுகிறது?.

________________________________________

சிலப்பதிகாரம் எத்தகைய சிறப்புக் கூறுகளைக் கொண்டுள்ளது?

________________________________________

**(10 புள்ளிகள்)**

**2. உமது தந்தை வாகனம் ஓட்டும்போது நீர் அருகில் இருந்தால் உமது தந்தை வாகனம் ஓட்டுமுன்பும் ஓட்டும்போதும் செய்ய வேண்டிய முறைகள் என்ன? (5 முறைகளை எழுதவும்)**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

**(10 புள்ளிகள்)**

**3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதுக.**

(உன்னை, உன்னுடைய, உன்னால், உன்னுடன், உன்னிடம்)

__________ வீதியில் நான் பார்த்தேன்.

__________ உதவியை நான் ஒருபோதும் மறவேன்.

__________ அம்மாவும் தங்கையும் வருகிறார்கள்.

__________ என்னுடைய பேனா உள்ளது.

__________ அந்த வேலையைச் செய்ய முடியும்.

**(10 புள்ளிகள்)**

| **4. சேர்த்தெழுதுக** | | **பிரித்தெழுதுக** | |
|---|---|---|---|
| வாழை – பழம் | __________ | மட்பாண்டம் | __________ |
| நெல் - பயிர் | __________ | எதிர்ச்சொல் | __________ |
| முள் - செடி | __________ | கடற்கரை | __________ |
| பால் - குடம் | __________ | பணவரவு | __________ |

மரம் - வேர் ________________ குழலோசை ________________

**(10 புள்ளிகள்)**

5. **பின்வரும் பந்தியை வாசித்து அதை தமிழில் மொழிபெயர்க்க.**

**Clever Farmer** :

One night a clever farmer was returning home from a cattle fair. He bought a buffalo from there. As he passed through a dense forest, a dacoit came in front of him. He had a thick stick in his hand. He said, "Hand over all that you have."

The farmer got scared and gave his money to the dacoit. As he turned to go, the dacoit said, "Give me the buffalo too. Why are you taking it away?"

The farmer handed over the buffalo's rope to the dacoit. Then the farmer said, ''You have taken everything of mine. Can you give me your stick?"

"Why do you need it?" the dacoit enquire "My wife will be pleased that at least I got a stick from the fair."

The dacoit gave the stick to the farmer happily. Immediately the clever farmer started beating the dacoit with the stick. The dacoit ran off to save his life leaving the buffalo and the farmer's money behind. So the clever farmer saved himself and his belongings too.

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

**( 10 புள்ளிகள் )**

**6. மாறி இருக்கும் சொற்களை ஒழுங்காக மாற்றி வசனம் அமைக்க**

ஆடை – தூய்மையான – அணிந்திருந்தாள் - குழலி

உறங்கியது – குழந்தை – அந்தக் - தாயின் - மடியில்

வேண்டும் - நாம் - எல்லோருக்கும் - உதவி – செய்ய

அந்தச் - பெயர் - சிறுமியின் - தெரியாது - எனக்குத்

செய்தார் - தமிழ்மொழிக்குப் - சேவைகள் - அவர் - பல

**(10 புள்ளிகள்)**

**7. நடந்து முடிந்த மாநிலத்தேர்தல் (Council Election) பற்றி அறிந்தவற்றை எழுதுக**

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

________________________________________________________________________________

__________________________________________________________________

________________________________________________________________________________

___________________________________________

**( 10 புள்ளிகள் )**